## உயிர்க்குணங்கள்

1.மனிதர்கள் வளர்க்க வேண்டிய பண்புகளாகவும் விலக்க வேண்டிய பண்புகளாகவும் நீங்கள் கருதுவன யாவை?

வளர்க்க வேண்டிய பண்புகள்:

- உண்மை
- சினம் கொள்ளாமை
- நேர்மை
- இரக்கம் கொள்ளுதல்
- சான்றோர்களைப் பின்பற்றுதல்
- மூத்தோரை மதித்தல்
- கருணை
- தன்னம்பிக்கை
- முயற்சி
- கடின உழைப்பு
- ஏழைக்கு உதவுதல்
- அறம்
- அறிவு

விலக்க வேண்டிய பண்புகள்:

- பொய்
- மறதி
- சோம்பல்
- களவு
- அச்சம்
- ஆசை
- புறம் கூறுதல்
- சினம்
- ஆடம்பரம்
- பொறாமை

2.பாவை நோன்பு என்றால் என்ன?

மார்கழி மாதம் பொழுது விடியும் முன்பே, பெண்கள் தூக்கத்திலிருந்து எழுந்து பிற பெண்களையும் எழுப்பிக்கொண்டு, ஆற்றுக்குச் சென்று நீராடி இறைவனை வழிபடும் வழக்கம் ‘பாவை நோன்பு ஆகும்.

3. திருப்பாவை நூல், திருவெம்பாவை நூல் பற்றிக் குறிப்பிடுக.

திருமாலை வழிபடச் செல்லும் பெண்கள் பிற பெண்களை எழுப்புவதாக ஆண்டாள் பாடியநூல் திருப்பாவை ஆகும்.

சிவபெருமானை வழிபடச் செல்லும் பெண்கள் பிற பெண்களை எழுப்புவதாகப் பாடப்பட்ட நூல் திருவெம்பாவை ஆகும். இந்நூலைப் பாடியவர் மாணிக்கவாசகர்.